<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No. 36 /2020</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–04, திரு.ராஜ்குமார் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜ்குமார் | வயது | : | 39/26 |
| த.பெ/ க.பெ. | : | பாலு | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | வேணாநல்லூர் | நிலை | : | LW04 / PW04 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( 1 முதல் 5, 7 வது எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு ,மனு அனுமதிக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது வேணாநல்லூரில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் ஒரு நாள் இரவு நானும் பாஸ்கர், மூர்த்தி, கொளஞ்சி ஆகியோர் சுடுகாட்டில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரே இருட்டாக இருந்தது. அந்த சமயத்தில் கும்பலாக 10, 20 நபர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த கும்பலில் யாரோ எங்களை அசிங்கமாகப் பேசி, தாக்கினார்கள். யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. இரவு நேரம் என்பதால் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. எங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்ததாலும்,

அவர்கள் அந்த கூட்டத்தில் நின்றுக்கொண்டிருந்ததாலும், அவர்கள்தான் எங்களை தாக்கியிருக்கக் கூடும் என்று நினைத்து, அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார். பின்னிட்டு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். தற்போது அவர்களுடன் சமாதானமாகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில், கடந்த 12.07.2019 ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில், எங்கள் ஊர் சுடுகாடு, காலனித்தெரு வழியாக இறந்துபோன துரைராஜ் என்பவரின் பிரேதத்தை கொண்டுசென்றபோது, அந்த தெருவைச் சேர்ந்த கோகுல் என்பவர் கையில் அருவாளுடன் அ.சா.1 ஐ அசிங்கமாகத் திட்டி, மிரட்டியதாகவும், பின்னர் கும்பலாக 20 நபர்கள் இருசக்கர வாகனத்தில் கையில் கட்டையுடனும், அருவாளுடனும் சுடுகாட்டிற்கு வந்து, பாஸ்கர், மூர்த்தி, கொளஞ்சி மற்றும் என்னையும் அசிங்கமாகப் பேசி, கட்டையால் அ.சா.2 ஐ நெஞ்சில் அடித்தும், அ.சா.3 ஐ வாங்கில் புடங்கால் இடித்து தள்ளியும், மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் அடிபட்ட நாங்கள் நால்வரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுள்ளதால் வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை
**மறு விசாரணை – இல்லை**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.